**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - 2020**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் முறையே கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதியிடப்பட்ட 3727-எஸ்ஆர்ஐ(சீஓஎல்) மற்றும் 0618- எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் ஆனதுடன் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்கள் ஆகும். தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 7,751 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் , ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.50 மில்லியனை கடனாகவும் மற்றும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.50 மில்லியனை மானியமாகவும் நிதியழிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவு கூற்றினையும் காசுப் பாய்ச்சலினையும இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

---

**2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

---

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வுச் சர்ச்சை | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயன்முன்னேற்றம் சதவீதம் | அடையப்பட்ட செயன்முன்னேற்றம் சதவீதம் | | |
| **டபிள்யூ-3, 4,5,8& 9** | ஐந்து பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் ஆறு முதற்தர மருத்துவப் பராமரிப்புப் பிரிவுகளின் கட்டிட நிரமாணம் | 100 | 0 | எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில் நிர்மாணங்களைப் பூர்த்திசெய்வதிலுள்ள பிரச்சனைகள். | **(i)** நிர்மாண வரைபடம், பீஓகியிலுள்ள குறைபாடுகள் மற்றும் செயற்திட்ட தயார்படுத்தலின் போது களநிலமையில் எதிர்கொண்ட பிரச்சனைகள்.<br>**(ii)** இடர் நிலைமையால் நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் மனிதவலு கிடைக்காமை.<br>**(iii)** கொவிட் பாதிக்கப்பட்ட நோயாளிகளிற்கு இந்த நிலையங்களில் சிகிச்சை வழங்குவதால் ஒப்பந்தகாரரை நிறுத்தவேண்டியிருந்தது.<br>**(iv)** இந்த நிர்மாணங்களில் பல தற்போது செயற்பாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுவதுடன் ஒப்பந்தகாரர்கள் அவர்களுடைய வேலைகளை வைத்தியசாலை செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஆகக்குறைந்த வேலைகளை ஈடுபடுத்தி வடிவமைக்க வேண்டியுள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | மேலே குறிப்பிட்ட காரணங்களால் இந்தத்த தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்ககூடும். |
| **கணக்காய்வாளரின் சிபாரிசு** | விரும்பிய செயன்முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------

| இலக்கம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | டொலஸ்வகே பிரதேச வைத்தியசாலை செயற்திட்டத்தின் நிர்மாணமானது தெரிவுசெய்யப்பட்ட் காணிகளின் நிலையற்ற தன்மையால் இடைநிறுத்தப்பட்டிருந்தபோதிலும் ஒப்பந்தகாரரிற்கு செலுத்தப்பட்ட ரூபா 5.71 மில்லியன் ஆரம்ப முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | டொலஸ்வகே பிரதேச வைத்தியசாலையின் நிர்மாணத்தின் போது, முற்பணக்கொடுப்பனவானது மாகாண சுகாதார திணைக்களத்தால் பிரேரிக்கப்பட்ட உப செயற்திட்டத்தின் நோக்கெல்லையில் ஏற்பட்ட மாற்றத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால், சாதகமான நீடிப்புத்தன்மையானது கவனத்தின் கீழ் இருந்தது. பிரேரிக்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்காக இனங்காணப்பட்ட திணைநிலங்களிலுள்ள பிரச்சனைகளினால் சில ஆரம்ப வேலை இருந்ததுடன் மீளாய்வின் போது கிரயமொன்று காணப்பட்டது. | இந்தப்பிரச்சனையானது உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். எனவேதான், அரசாங்கமானது நட்டமொன்றை ஏற்படுத்த வேண்டியதில்லை. |
| (ஆ) | அம்பகஸ்வெவ முதற்தர மருத்துவப் பராமரிப்பு பிரவின் முன்னேற்றத்திற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், இந்த வேலையானது 2020 யூலை 15 இற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இது 2021 பெப்ரவரி 1 அளவிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அத்தோடு, உட்கூரையை ரைலிங் இடுவதற்கும் பொருத்துவதற்குமாக ரூபா 2.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால், இந்த இரண்டு விடயங்களும் வேண்டப்பட்ட நியமங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் முறியானது 2021 யூன் 09 வரையிலும் 03 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்ததுடன் நீடிக்கப்பட்ட காலப்பகுதியின் போது முற்பணமானது முழுமையாக அறவிடப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கபட்ட தரத்துடன் குறித்தகாலத்தில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அனுராதபுர மாவட்டத்திலுள்ள திட்டகொனாவ முதற்தர மருத்துவ பராமரிப்புப் பிரிவிலுள்ள முன்னேற்றத்திற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டமானது 2020 ஆகஸ்ட் அளவில் முன்னர் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டது. ஆனால், இது 2021 மே 31 அளவிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் ஊழியர் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை | முற்பணம் மற்றும் செயலாற்றல் முறியானது முறையே 2021 யூன் 02 மற்றும் 2021 மே 28 வரையிலும் நீடிக்கப்பட்டிநருந்தது. | குறித்தகாலத்தில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் தேவையான காப்புறுதியானது பெறப்பட்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கொறப்பத்தான பிரதேச வைத்தியசாலை கட்டிடமானது 2020 ஆகஸ்ட் 15 அளவில் பூர்த்திசெய்யப்பட பட்டியலிடப்பட்டது. ஆனால், இது 2021 மே 31 அளவிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் மேலும், இலக்கம் 33 வேலையின் விடயமானது வேண்டப்பட்ட நியமத்துடன் செயற்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் முறியானது 2021 ஆகஸ்ட் 07 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது. காப்புறுதி கொள்கை ஆவணமானது பெறப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கபட்ட தரத்துடன் குறித்தகாலத்தில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| இலக்கம் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ஐ.அ.டொலர் 37.5 மில்லியன் மொத்தக்கடனில், மொத்தக்கடனில் 36.37 சதவீதமான ஐ.அ.டொலர் 13.64 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் விளைவால், மீளாய்வாண்டின் இறுதியளவில் பயப்படுத்தப்படாத மீதிகள் மீது கடப்பாட்டு கட்டணங்களாக ரூபா 34,435,738 செலுத்தவேண்டியுள்ளது. | ஏடிபீயானது கடன் உடன்படிக்கையில் இணங்கப்படடவாறு கடப்பாட்டுக் கட்டணங்களை கடன்கணக்கிற்கு நேரடியாக வரவுவைப்பதன் மூலம் அறவிட்டிருந்ததுடன் அத்தொகை செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் கடன் கிரயமாக இனங்காணப்பட்டிருந்தது. | விருப்பப்பட்ட செயன்முன்னேற்றத்தை அடைவதற்கும் கடப்பாட்டுக் கட்டணங்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 இரட்டை வான்கள் மற்றும் 09 வான்களின் கொள்வனவிற்காக பெறப்பட்ட விலைமனுக்களை மீளப்பெற்றிருந்தமையால், ரூபா 2.95 மில்லியன் தொகையான இரண்டு விலைமனுக்கள் காசாக்கப்பட்டிருந்தது. ஆனால், 1.66 மில்லியன் ரூபா எந்தவித காரணமில்லாமலும் அதிகாரமில்லாமலும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | 07 இரட்டை வான்கள் மற்றும் 09 வான்களின் கொள்வனவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் அதன் செல்லுபடியாகும் காலப்பகுதியின் போது மீளப்பெறப்பட்டிருந்தது. அதனை அடிப்படையாகக்கொண்டு ரூபா 2,950,000 தொகையான உரிய விலைமனு முறிகள் உடனடியாக இழக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து விலைமனுதாரார் 9 வான்களிற்கான விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு இணங்கியிருந்தனர். அந்த நேரத்தில் வெகுமதிக்கான நோக்கக் கடிதங்கள் விலைமனுதாரருக்கு அனுப்பபட்டிருக்காததுடன் எந்தவொரு மனுதாரரும் குழு தீர்மானம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை. மேலும், விலைமனுதாரர் குறித்த மாதிரியின் உற்பத்தி தடைப்பட்டமையால் 7 இரட்டை கப் வாகனங்களை வழங்கமுடிந்திருக்கவில்லை என குறிப்பிட்டார். 9 வான்களிற்கான விலைமனுக்குரிய முறியின் பெறுமதியை மீளளித்திருந்தார். | இந்தத்தொகை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 226,512,562 மொத்தக்கிரயத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிற்காக பொருள் விநியோகித்தல் தாள்கள் வழங்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின்போது 84 சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்டிருந்தது. அத்தோடு பொருட்களானது இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக பொருள் பெறுகை தாளானது உரிய பிரிவுகள் அல்லது நிறுவனங்களிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அரச வழிகாட்டலிற்கிணங்க இருப்பு முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | பொருள் விநியோகித்தல் தாள்கள் மற்றும் பொருள் பெறுகைத் தாள்கள் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விநியோகிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட அலுவலகத்திற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடகத்தின் குத்தகை உடன்படிக்கையானது முற்பணக் கொடுப்பனவின் கூறுகளை உள்ளடக்கியிருந்தமையால் சட்ட நாயகத்தின் ஆலோசனையுடன் இது மேற்கொள்ளப்பட வேண்டும்.ஆனால், இந்த விடயம் சட்ட நாயகத்துடன் ஆலோசிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் தேவைப்பாடானது அலுவலக இடங்களிற்காக ஏற்படுத்தப்பட்ட குத்தகை உடன்படிக்கை மீள்புதுப்பிக்கும் போது இணங்க வேண்டும். | நிதிப் பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |
| (உ) | வரிப்பற்றுச்சீட்மை சமர்ப்பிக்காத 04 ஒப்பந்தகாரர்களிற்கு 07 சந்தர்ப்பங்களில் ரூபா 808,027 பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் மருத்துவ உபகரணத்தின் விற்பனை தொடர்பாக ரூபா 1,590,832 மொத்தத் தொகை உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்தின் பதிவுசெய்யப்படாத வழங்குனருக்கு மருத்துவ உபகரணத்தின் விற்பனை பெறுகை மீதான பெறுமதி சேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கல்கள் சில பெறுமதி சேர் வரிக்குரியதாகவுள்ளதுடன் (வற்), செயற்திட்டமானது வற் பதிவு விபரங்களை பெறுகை மற்றும் கொடுப்பனவுக் கட்டத்திலும் பரிசோதித்து சரிபார்க்கின்றது. (வரிகளுடன் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர்) | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | ஒரு தடவையில் அனுமதிக்கப்பட வேண்டிய செயற்திட்ட இயக்குனர்களிற்கான அதிகூடிய நிதி எல்லை ரூபா 2,000,000 ஆகும். எனினும், மீளாய்வாணடின் போது செயற்திட்ட இயக்குனர் அவ் எல்லையை விஞ்சி 12 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகளை அனுமதித்திருந்தார். | இந்தக் கொடுப்பனவுகளானது கொடுப்பனவுச் சீட்டுக்களை அனுமதிக்கின்ற போது பிரதேச பெறுகை குழுவின் அனுமதி எல்லையை தவறுதலாக கவனத்தில் கொண்டமையால் அனுமதிக்க வேண்டியிருந்தது. | சுற்றறிக்கையுடன் இணங்க வேண்டும். |